மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.ஜி.ஜெயராமன்.பி.காம்.,

ந.க.எண். 177/2017/தி1 நாள்: .12.2017.

பொருள் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு - முறைப்படுத்துதல் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் - ஆலாத்தூர் ஊராட்சி ஆலாத்தூர் கிராமம் - சர்வே எண். 2/2,2/3pt, 2/4, 3/3B pt -ல் 6940.26 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் வரன்முறைப்படுத்தி கொள்கையளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை 1. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் : 04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம் - III, பிரிவு 1(A), நாள் : 04.05.2017 மற்றும் அரசாணை எண்.172 நாள் : 13.10.2017.

2. உறுப்பினர் செயலர் (பொ) மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மாநகராட்சி அலுவலக வளாகம் 3-ம் தளம், அண்ணா மாளிகை, மதுரை - 2 கடித ந.க.எண். 1545/2017/ம.தி.2 நாள் : 13.12.2017.

*****

உத்தரவு:

பார்வை 2-ல் காணும் கடிதத்தில், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆலாத்தூர் ஊராட்சி ஆலாத்தூர் கிராமம் - சர்வே எண். 2/2,2/3pt, 2/4, 3/3B pt -ல் 6940.26 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 1-ல் சுட்டிய அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு மதுரை மாநகராட்சி உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் (in Principally accepted layout frame) ம.வ./ம.உ.தி.கு.எண்.18(R)/2017 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத மனைகளுக்கான திறவெளி ஒதுக்கீடு (OSR) பரப்பு 463.95 ச.மீ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை ஆலாத்தூர் ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்டது.
2. முறைப்படுத்துதல் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் அரசு கணக்கில் செலுத்தப்பட்டது. மேலும், வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/-வீதம் "Special Officer" - தனி அலுவலர் ஆலாத்தூர் ஊராட்சி தனிக்கணக்கில் செலுத்தப்பட்டது.

<u>நிபந்தனைகள் :</u>

1. மனைப்பிரிவின் சாலைகள் அனைத்தும் கொள்கையளவிலான மனைப்பிரிவு வரன்முறை வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக் கொள்ளப்படும். மேலும், பொதுப்பாதையிலிருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் மனையிடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப் பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ளும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலைகளையும் OSR ஒதுக்கீடு இடங்களையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப் பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய்த் துறை ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
3. தனித்த மனை வரன்முறைக்கு அபிவிருத்திக் கட்டணம், OSR கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் ஆகியவற்றினை 30 நாட்கள் கால அவகாசமிட்டு மனுதாரரிடம் உள்ளாட்சியால் கேட்பு செய்யப்படும். 30 நாட்களில் செலுத்தப்படாத நிலுவைத் தொகைக்கு 6 % வட்டி வசூலிக்கப்படும். கேட்பு செய்து 90 நாட்களுக்குள் செலுத்தாத போது மனைக்கு வரன்முறை செய்வதற்கு அனுமதி மறுக்கப்படும்.
4. இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிட வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.

Scanned by CamScanner

5. உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.
6. நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (in Priciple) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல. அதே போன்று ஊராட்சியோ, ஊராட்சி ஒன்றியமோ பொருத்தமான அமைப்பு அல்ல.
7. சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு ஒன்றாக மரம் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
8. மேற்கண்ட நிபந்தனைக்களை மீறும் பட்சத்தில் இவ்வுத்தரவு எப்பொழுது வேண்டுமானாலும் இரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சர்வே எண். 2/2,2/3pt, 2/4, 3/3B pt - ல் 1,2,3,4,4A,5,6,7,7B,7A,9,11,12,12A,14,15,16,16A,18,19,21,22,23,24,25,25A,27,28,29, 30,31,33,36,37,38,39,40,41,42,43,44,45 என்ற மனைப்பிரிவில் உள்ள பிளாட் எண்களுக்கு மட்டும் ஆலாத்தூர் ஊராட்சி மூலம் வரைபடம் ஒப்புதல் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

தனி அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்,(கிஊ),
ஆலாத்தூர் ஊராட்சி.

பெறுநர்

திரு.T.ரவிச்சந்திரன்,
No.1/1, ஆலாத்தூர்,
திருமால்புரம் அஞ்சல்,
மதுரை - 625 017.

நகல் :

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
மதுரை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர், ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகம்,
மதுரை வடக்கு. திருவாதவூர் ரோடு, ராஜகம்பீரம், மதுரை - 625 107.
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

Scanned by CamScanner